# காயத்ரீ மந்த்ர தீக்ஷை

## தன்மை மற்றும் விதிமுறை

**தீக்ஷை :** தீக்ஷை மேற்கொள்வதன் பொருள் எந்த விசேஷ ஸாதனையிலும் அதற்கென நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகளை ஏற்றுக்கொண்டு உறுதியோடு நுழைவது காயத்ரீ மந்த்ர தீக்ஷயின் பொருள். காயத்ரீ மஹாவித்யாவை வாழ்க்கையின் அச்சு என ஒப்புக்கொண்டு அதன் ஸாதனையில் ஈடுபடுவது சிறப்பு.

காயத்ரீ மஹாவித்யாவை ரிஷிகள், ரகசியமான (தனிச்சிறப்புள்ள) வித்யாவின் வடிவில், தேர்ந்தெடுக்கப்பட்ட ஸாதகர்களுக்கு மட்டுமே தருதற்கான விதிமுறைகளை ஏற்படுத்தினர். யுகத்தின் அவசியத்தைப் பார்த்தும், புரிந்து கொண்டும், பூஜ்ய குருதேவர் கடுமையான தவ ஸாதனை செய்து, இந்த வித்யாவை மிக எளிதானதாக, இயற்கையாக அடையக்கூடியதாக ஏற்படுத்தினார். இந்த புதிய ஸாதனா விதியை அவர் புத்தகங்களிலும் எழுதி, எல்லோர்க்கும் எளிதானதாக ஆக்கி உள்ளார். இதைப் படித்து, விருப்பமுள்ள எவரும் இந்த ஸாதனையைச் செய்யலாம். அதன் நன்மையை அடையலாம்.

முறைப்படி குருதீக்ஷை பெறுவதனால் ஸாதனை சீக்கிரமாகப் பலிக்கிறது. தகுதி வாய்ந்த குருவானவர் தனது ப்ராணன், தவம் மற்றும் புண்யத்தின் ஒரு பங்கை அளித்து, ஸாதகனின் ஸாதனையை வளமையும், திறமையும் உள்ளதாக மாற்றிவிடுகிறார். ஆனால் இந்த அருட்கொடை பிச்சைக்காரனைப் போல் பிச்சை எடுப்பதால் கிடைப்பதில்லை, நம்பிக்கையுள்ள ஸாதனையின் மூலமாகத் தனது உண்மைத் தன்மையை நிரூபிப்பதால் மட்டுமே கிடைக்கிறது.

குருவின் தவ அருளைப் பெறுவதறக்குத் தகுதி உடைய விதிமுறைகளை முழு ஈடுபாட்டோடு தனதாக்கிக் கொள்ளக் கூடியவர்கள், கடைப்பிடிக்கக் கூடியவர்கள் மட்டுமே யுக

தீர்த்தத்திற்கு வந்து தீக்ஷை பெற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்ய இயலாதவர்கள் தீக்ஷையின் கர்ம காண்டத்தை முழுவதுமாக முடித்தாலும் எந்த விசேஷமான பயனும் ஏற்படுவதில்லை. காயத்ரீ திவ்யமான, உயிருள்ள வித்யாகும். தீக்ஷை என்பது அந்த வித்யாவை அடைவதற்காக பள்ளியில் நுழைவதாகும். இதற்காக குரு தனது சக்தியின் அருளைத் தருகிறார் என்றாலும் ஸாதகனும் அவற்றிற்கான வழிமுறைகளான 'ஸாதனா ஸ்வாத்யாயம், ஸம்யம், ஸேவா' (ஸாதனை, படிப்பு, கட்டுப்பாடு, ஸேவை) இவற்றின் நிர்ணயிக்கப்பட்ட முன்னேற்பாடுகளைத் தனதாக்கிக் கொண்டு, கிடைக்கும். அருளை உள்வாங்கிக் கொண்டு, தனது ப்ராணசக்தியை மலரச்செய்து கொள்ளவேண்டும். தீக்ஷை பெற்றுக் கொள்பவர்களுக்கான கண்டிப்பான விதிமுறைகள் இவ்விதமானவை :–

<u>**ஸாதனை :**</u> காயத்ரீ மந்திரத்தின் குருதீக்ஷையைப் பெறுபவர்கள் சிரத்தையுடன் காயத்ரீ மஹாமந்த்ர ஜபத்தோடு உபாசனை ஸாதனையும் செய்தாக வேண்டும். தீக்ஷை பெற்ற ஸாதகன் தினமும் மூன்று மாலை அல்லது அதற்கு மேலாக ஜபம் செய்தாக வேண்டும். ஏதாவது இடைஞ்சலால் முடிக்க முடியாவிட்டாலும், ஒரு மாலையாவது (108) மந்திர ஜபம் செய்தே ஆக வேண்டும்.

<u>**ஸ்வாத்யாயம் :**</u> குருவின் வேலை – கற்றுத் தருவது, சீடனின் வேலை – கற்றுக்கொள்வது. பூஜ்ய குருதேவரை குரு–வழிகாட்டி என ஏற்றுக்கொண்டு, அவரது புத்தகங்களின் மூலமாக அவருடைய கருத்துக்கள், முன்னுதாரணங்கள், கொள்கைகள், இவற்றை சுயபடிப்பின் மூலமாக உள்வாங்கிக் கொள்வதற்கான ஒழுங்கான முறையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

<u>**ஸம்யம் :**</u> ஸாதனையின் அருளினால் கிடைத்த சக்தி தவறான வழியில் செல்லாமல் இருப்பதற்காக, கட்டுப்பாடு, விரதம் இவற்றைக் பயில வேண்டும். தனது வாழ்வில் நுழைந்துள்ள குறைபாடுகளை நீக்கி, நற்பண்புகளை வளர்த்துக் கொள்ளும் முறையை கடைப்பிடிக்க வேண்டும். இதன் ஆரம்பமாக